ஆண்டு தைமாதத்துடன் முடிவடைந்தமையே. இப்பொழுது அந்த அறைகள் பார்வையிடுதலுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளன, தற்போது அங்கு ஒருவரும் சித்திரவதை செய்யப்படுவதுமில்லை நச்சு வாயுவின் மூலம் கொல்லப்படுவதுமில்லை. அவுஷ்சி விற்ஸின் வாயு அறைகள் காலத்தால் வரையறுக்கப்பட்டிருந்தன. ஆனால் வேதத்தில் கூறப்படும் நரகமானது நித்திய காலத்திற்கும் இருக்கும்.

தற்காலத்தில் பிரதான பொருட்காட்சிச்சாலையாக விளங்கும் அந்த நுழைவுமண்டபத்தில் என்னுடைய பார்வை ஒரு சிலுவையில் தொங்கும் கிறிஸ்துவின் சரீரத்தின் காட்சியில் விழுந்தது. ஒரு சிறைக்கைதி தன்னுடைய நம்பிக்கையை சிலுவையிலறையப்பட்டவர்மேல் வைத்து, அக்காட்சியை சுவரில் ஒரு ஆணியால் செதுக்கியிருந்தான். இந்த ஓவியனும் நச்சுவாயுவினால் மரணமடைந்தான். இவன் இரட்சகர் இயேசுவை அறிந்திருந்தான். அவன் ஒரு கொடுமையான இடத்தில் மரித்திருந்தாலும்கூட அவனுக்காக பரலோகம் திறந்திருந்தது. ஆண்டவராகிய இயேசு புதிய ஏற்பாட்டில் இந்த நரகத்திற்கு (உதாரணத்திற்கு மத்தேயு 7:13, 5:29-30, 18:8) ஒரு மனிதன் ஒருமுறை சென்றானேயானால் அங்கிருந்து தப்பித்துக்கொள்ளுதலும் இரட்சிப்பும் கிடையாது என்று பலமாக எச்சரித்துள்ளார். நரகமானது அவுஷ்சி விற்ஸுக்கு மாறுபட்டதாக நித்தியத்திற்கும் இயங்கிக் கொண்டிருப்பதால் அங்கு சென்று அதை பார்வையிட முடியாது.

மோட்சமும் நித்தியகாலமாக இருக்கும். அந்த நகரத்திற்கே தேவன் எங்களைக் கொண்டு செல்ல விரும்புகிறார். ஆதலால் மோட்சத்துக்குச் செல்லும் அழைப்பிதழை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆண்டவருடைய நாமத்தை அழைத்து, மோட்சத்தை உங்களுக்கென்று பதிவுசெய்துகொள்ளுங்கள்! ஒரு விரிவுரையின் பின்பு „மோட்சத்தை முற்றாகவே பதிவுசெய்து கொள்ளமுடியுமா? இது பயண முகவர் பணிமனை போல ஒலிக்கிறதே“ என்று என்னிடம் ஒரு பெண் குழப்பத்துடன் கேட்டாள். நான் அதை ஒத்துக் கொண்டேன்: „எவர்கள் பதிவுசெய்யவில்லையோ அவர்கள் போய் சேரும் இடத்தை அடைவதில்லை. நீங்கள் ஹவாய் தேசத்திற்கு செல்லவேண்டுமென்றால் அதற்குக்கூட உங்களுக்கு ஒரு செல்லுபடியான விமானப் பயணச்சீட்டு தேவைப்படுகிறதல்லவா“. அவள் மீண்டும் கேட்டாள்: „அப்படியானால் அந்த விமானப் பயணச்சீட்டிற்கு கட்டணம் கொடுத்தாக வேண்டுமே?!“ „ஆமாம் – மோட்சத்திற்கு செல்லும் பயணச்சீட்டிற்கும்கூட கட்டணம் செலுத்த வேண்டும். ஆனால் அதன் விலை எங்கள் ஒருவராலும் செலுத்த முடியாத அளவிற்கு அதிகமாக இருக்கிறது. எங்களுடைய பாவமே அதைத் தடைசெய்கிறது. தேவனோ பரலோகத்தில் எந்தப் பாவத்தையும் அனுமதிப்பது இல்லை. எவரெல்லாம் பூலோக வாழ்வின்பின் நித்தியத்தை தேவனோடு கழிக்க விரும்புகிறார்களோ, அவர்களெல்லாம் முதலாவதாக தம்முடைய பாவத்திலிருந்து மீட்கப்பட வேண்டும். இந்த மீட்பானது ஒரு பாவமில்லாத மனிதன்மூலமாகவே கிடைக்கும் – அவரே இயேசு கிறிஸ்து. அவர் ஒருவரே இக்கட்டணத்தை செலுத்தக்கூடிய தகுதியில் இருக்கிறார். அவர் தன்னுடைய சிலுவை மரணத்தின் மூலம் சொந்த இரத்தத்தினால் அந்த விலைக்கிரயத்தை செலுத்தினார்“.

இப்பொழுது நான் மோட்சம் செல்லும்படியாக என்ன செய்ய வேண்டும்? எங்களுக்கும்கூட தேவன் தன்னுடைய இரட்சிப்புக்கான அழைப்பைத் தருகிறார். சத்திய வேதத்தில் அநேக வசனங்கள் அழுத்தத்துடன் தேவனுடைய அழைப்பிற்கு செவிசாய்க்கும்படி எங்களை அழைக்கின்றன:

- „இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்க பிரயாசப் படுங்கள்!“ (லூக்கா 13:24).
- „மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபமாய் இருக்கிறது!“ (மத்தேயு 4:17)
- „இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதன் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்“ (மத்தேயு 7:13-14).
- „நித்திய ஜீவனைப் பற்றிக்கொள், அதற்காகவே நீ அழைக்கப் பட்டாய்“ (1. தீமோத்தேயு 6:12).
- „கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்“ (அப்போஸ்தலர் 16:31).

இவையெல்லாம் மிகவும் விழிப்படையச் செய்யும் அவசர அழைப் புக்களாக உள்ளன. இவ்வசனங்களின் உண்மையையும் தீர்மானிக்க வேண்டிய நிலையையும், அத்தியாவசியத்தையும் நாம் உணரக் கூடியதாக உள்ளது. மோட்சம் செல்லும் இவ்வழைப்புக்கு நாம் சுதந்தரமான முறையில் தேவனை நோக்கி செய்யும் வேண்டுதலின் மூலம் பதிலளிக்க முடியும்:

„ஆண்டவராகிய இயேசுவே, இதுவரைக்கும் நீர் இல்லாததுபோலவே, உம்மை அறியாமலே என் வாழ்கையை கடத்திவிட்டேன். இப்போது நீர் யார் என்பதை நான் அறிந்து கொண்டேன், ஆதலால் இந்த வேண்டுதலின்மூலம் உம்மிடம் வருகிறேன். இன்றுதானே பரலோகம் என்றும், நரகம் என்றும் இரண்டு இடங்கள் உண்டென்பதை தெரிந்து கொண்டேன். நான் என் குற்றங்களினிமித்தம், முக்கியமாக என்னுடைய அவிசுவாசத்தின் நிமித்தம் செல்ல வேண்டிய நரகத்தில் இருந்து என்னை காப்பாற்றும். நான் இறுதியில் உம்முடன் மோட்சத்தில் இருக்க விரும்புகிறேன். என்னுடைய சம்பாத்தியத்தாலோ, நற்செயல்கள்மூலமோ மோட்சம் செல்ல முடியாதென்றும், அது உம்மில் வைத்திருக்கும் நம்பிக்கையின் மூலமே ஆகும் என்றும் விளங்கிக்கொண்டேன். நீர் என்னை அதிகம் நேசித்தபடியால், எனக்காக சிலுவையில் மரித்தீர். என்னுடைய தவறுகளை நீரே ஏற்றுக்கொண்டு, அதற்கான விலைக்கிரையத்தையும் செலுத்திவிட்டதால் உமக்கு நன்றி. என் சிறுவயது முதல் என்னுடைய எல்லா குற்றங்களையும் நீர் காண்கிறீர். நீர் ஒவ்வொரு பாவத்தையும் அறிந்திருக்கிறீர். சந்தோஷமோ – துக்கமோ, நல்வாழ்வோ – நம்பிக்கையற்ற நிலையோ, நீர் அறிவீர். நான் இப்பொழுது இருக்கும் நிலையிலும், கடந்தகால வாழ்கைமுறையின் நிமித்தமும் நான் உமக்கு முன்பாகவும் ஜீவனுள்ள தேவனுக்கு முன்பாகவும் நிற்க முடியாது – இதன்மூலம் மோட்சத்தை அடையாமல் போய்விடுவேன். என்னுடைய பாவங்களுக்காக நான் இன்று மனம் வருந்துகிறேன். அவைகளை எனக்கு மன்னியும். இப்பொழுதே நான் உம்மை என்னுடைய ஆண்டவராக ஏற்றுக்கொள்ளுகிறேன். நீர் என் வாழ்வை பொறுப்பெடுத்துக்கொள்ளும். நீர் விரும்பும் விதமாக நான் வாழ விரும்புகிறேன். உமக்குப் பிரியமில்லாத எல்லாவற்றையும் நான் என்னைவிட்டு நீக்கும்படி எனக்கு உதவிசெய்யும், உம்முடைய ஆசீர்வாதங்களுக்குக் கீழாக இருக்கும் நல்ல பழக்கவழக்கங்களை எனக்குத் தாரும். உம்முடைய வசனமாகிய சத்திய வேதத்திற்கான வாசலை எனக்குத் திறவும். நீர் எனக்கு உம்முடைய வசனத்தின் மூலம் என்னத்தைச் சொல்ல விரும்புகிறீர் என்பதை விளங்கிக்கொள்ள எனக்கு உதவி செய்யும். அதில் என் வாழ்வுக்கான பெலத்தையும், வாழ்வின் நிறைவையும் கண்டடைய உதவிசெய்யும். இன்றிலிருந்து நீர் என் ஆண்டவராய் இருப்பீராக. நான் உம்மைப் பின்பற்ற விரும்புகிறேன். நான் நடக்க வேண்டிய பாதையை தயவாய் எனக்குக் காண்பியும். நீர் என் வேண்டுதலைக் கேட்டபடியால் நன்றி. நான் உம்முடைய வாக்கை நம்பி, அதின்படி உம்மை நோக்கிப் பார்த்தபடியால், உமது பிள்ளையானேன். நான் ஒரு நாள் மோட்சத்தில் உம்மோடு இருக்கப்போகிறேன். உம்மை என் வாழ்வின் எல்லா சூழ்நிலையிலும் என் பக்கத்தில் இருக்க பெற்றுக்கொண்ட மிகப் பெரிய ஆதாயத்தை குறித்து மிகவும் மகிழ்சி அடைகிறேன். உம்மை நம்புகிற மனிதர்களையும், உம்முடைய வசனத்தை கேட்க்கக்கூடிய வேதவசனத்தில் கட்டப்பட்ட ஒரு திருச்சபையையும் நான் கண்டுபிடிக்க எனக்கு உதவி செய்யும். ஆமேன்.“



(இந்த செய்தியை துண்டுப்பிரதியாக கீழ்காணும் முகவரி மூலம் பெற்றுக் கொள்ளலாம்.)

Prof. Dr. Eng. Werner Gitt


Title of the original edition: Wie komme ich in den Himmel?
Translation from German into Tamil: Brintha Surenthirakumar
Author’s homepage: wernergitt.de

Bruderhand-Medien
Am Hofe 2, 29342 Wienhausen, Germany
Tel.: +49 (0) 51 49 98 91-0, Fax: -19
info@bruderhand.de | bruderhand.de

Nr. 120-53 – Tamil – 7th edition 2019

# நான் எப்படி மோட்சம் சென்று அடையலாம்?

Werner Gitt



120-53 Himmel Tamil Auflage 7 2019-08-21.indd 1-4
03.01.2022 15:57:10

# நான் எப்படி மோட்சம் சென்றடையலாம்?

நித்தியத்தைக் குறித்த கேள்வி அநேக மனிதர்களால் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. தம் வாழ்வின் முடிவைக் குறித்து சிந்திப்பவர்களிடம் கூட நாம் இதை காணக்கூடியதாக இருக்கிறது. அமெரிக்க நடிகையாகிய ட்றூவ் பரிமூர் (Drew Barrymoore) என்பவர் „இ.ரி. – வெளியுலகத்து மனிதன்“ என்ற கற்பனைப் படத்தில் குழந்தை நட்சத்திரமாக ஒரு முக்கிய கதாபாத்திரத்தை ஏற்று நடித்திருந்தார். அவர் இருபத்தெட்டு வயதாக இருந்த போது (பிறப்பு 1975) „ஒருவேளை நான் எனது பூனைக்கு முன்பாக மரணமடைந்தால், என்னுடைய சாம்பலை என் பூனைக்கு உணவாகக் கொடுக்கும்படி விரும்புகிறேன். அப்பொழுது குறைந்த பட்சம் நான் என் பூனைக்குள்ளாவது தொடர்ந்து வாழ்வேன்“ என்று கூறினார். மரணத்தைக் குறித்த இத்தகைய தெளிவற்ற தன்மையும் குறுகிய பார்வையும் திகிலையுண்டாக்கவில்லையா?

இயேசுவின் காலத்தில் அநேக மனிதர்கள் அவரிடம் வந்தார்கள். அவர்களுடைய வேண்டுகோள்கள் யாவும் அதிக பட்சம் பூமிக் குரியவையாகவே இருந்தன:

- பத்து குஷ்டரோகிகள் சுகமடைய விரும்பினார்கள் (லூக்கா 17:13),
- குருடர்கள் பார்வையடைய விரும்பினார்கள் (மத்தேயு 9:27),
- ஒரு மனிதன் சொத்து பிரச்சனை ஒன்றில் உதவியை எதிர் பார்த்தான் (லூக்கா 12:13-14),
- பரிசேயர் ராஜனுக்கு வரி செலுத்த வேண்டுமா என்ற குற்றம் பிடிக்கும் கேள்வியுடன் வந்தனர் (மத்தேயு 22:17).

மிகக் குறைந்த மனிதரே, மோட்சத்துக்குச் செல்லுவது எப்படி என்பதை அறியும்படி, இயேசுவிடம் வந்தார்கள். ஒரு செல்வந்த இளைஞன் ஒரு கேள்வியுடன் அவரைத் தேடிவந்து: „நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?“ என்று கேட்டான் (லூக்கா 18:18). அவன் எதை செய்ய வேண்டும் என்பது அவனுக்கு சொல்லப்பட்டது, அது என்னவெனில்: அவன் இருதயம் எதையெல்லாம் பற்றிக்கொண்டிருந்ததோ, அதையெல்லாம் விற்றுவிட்டு இயேசுவைப் பின்தொடர்வதே. ஆனாலும் அவன் மிகுந்த செல்வந்தனாய் இருந்தபடியால், அந்த ஆலோசனையைக் கைக்கொள்ள மனதில்லாமல் மோட்சத்துக்குச் செல்வதை நிராகரித்தான். மோட்சத்தைத் தேடாத மனிதர்களுக்குக்கூட இயேசு இதைக்குறித்து விளக்கியபொழுது அவர்கள் அதை நொடிப்பொழுதில் பற்றிக்கொண்டார்கள். சகேயு என்னும் வரிவசூலிப்பவன் ஒருவன் இருந்தான். அவன் இயேசுவைக் காணவேண்டும் என ஆசைப்பட்டான். ஒரு நாள் இயேசு அவ்வழியே வருகிறார் என்பதை அறிந்து அவரை பார்க்கச் சென்றான். ஜனக்கூட்டம் அதிகமாயிருந்ததாலும், அவன் குள்ளனாய் இருந்ததாலும் அவரைக் காண முடியாமல் ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். இயேசு அவன் இருந்த மரத்தருகே வந்து அவனைப் பார்த்து „சகேயுவே! இறங்கி வா. இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டும்“ என்றார். சகேயு சீக்கிரமாய் இறங்கி இயேசுவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று விருந்து செய்தான். அத்துடன் அவன் தன் பாவங்களையும் இயேசுவிடம் அறிக்கை செய்தான். அப்பொழுது இயேசு „இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது“ (லூக்கா 19:9) என்று உறுதிப்படுத்தினார். அவன் எதிர்பார்த்ததைவிட அதிகமாய் கண்டடைந்தான்.

## மோட்சத்தைக் கண்டடைவது எப்படி?

இதுவரைக்கும் மேல் கூறப்பட்டவைகளில் நாம் பற்றிக் கொள்ளக் கூடியவை:

- மனிதன் ஒரு குறிப்பிட்ட நாளில் பரலோக ராஜ்யத்தைக் கண்டு கொள்ளுகிறான். அன்பான வாசகரே! நீங்கள் தேவனிடத்தில் நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்வது இன்றைக்கு உங்களுக்கு அதிக சாத்தியமாக இருக்கிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்வது நல்லது.
- பரலோகராஜ்யத்தைப் பெற்றுக் கொள்வது என்பது நாம் சமர்ப்பிக்க வேண்டிய ஒரு சேவையோடு இணைக்கப்படவில்லை.
- பரலோக ராஜ்யத்தை முன்கூட்டிய ஆயத்தம் இல்லாமலும் கண் டடைய முடியும்.

நாம் தேவனின் கட்டளையின்படி நடக்காத பட்சத்தில், நாம் மோட்சத்துக்குச் செல்லுவோம் என்ற எம் சுய சிந்தனை முற்றிலும் தவறானது. உதாரணமாக ஒரு துள்ளிசைப்பாடகி நீண்ட கால கலைக்கூத்து பணியில் இருந்து விலகிய ஒரு கோமாளியைப்பற்றி ஒரு பாடலில் இப்படியாகப் பாடியிருந்தார்: „அவன் நிச்சயமாக மோட்சம் செல்வான், ஏனெனில் அவன் அநேக மனிதர்களை மகிழ்ச்சியடைய வைத்திருக்கிறான்.“ பிரதான தேவாலய மத குருவாகிய ஒரு பணக்கார பெண், ஒரு சத்திரத்தைக் கட்டுவித்தார். அதில் இருபது பெண்கள் இலவசமாக தங்கக்கூடியதாக இருந்தது. அவர் அத்துடன் ஒரு நிபந்தனையையும் இணைத்திருந்தார். அதாவது: அந்தப் பெண்கள் தேவாலய மத குருவாகிய பெண்ணின் இரட்சிப்புக்காக ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் வேண்டுதல் செய்ய தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதே.

## உண்மையாக நம்மை எது மோட்சம் கொண்டு சேர்க்கும்?

இக்கேள்விக்குத் தெளிவும் விளக்கமுமாகப் பதிலளிப்பதற்கு, இயேசு எங்களுக்கு ஒரு உவமையைச் சொல்லியிருக்கிறார். லூக்கா சுவிசேஷம் அதிகாரம் 14:16ல் அவர் ஒரு மனிதனைப்பற்றிக் கூறுகிறார். (அவ் மனிதன் தேவனுக்கு ஒப்பிடப்படுகிறான்) அவன் ஒரு பெரிய விருந்தை ஆயத்தப்படுத்தி (அவ்விருந்து பரலோகத்துக்கு ஒப்பிடப்படுகிறது) தெரிவு செய்யப்பட்ட மனிதர்களுக்கு அழைப்பிதழ்களை அனுப்பினான். அழைக்கப்பட்டோரின் பதில்கள் அதிர்ச்சியை உண்டாக்கின. ஒருவர் பின் ஒருவராக தங்களை மன்னிக்கும்படியாய் வேண்டிக்கொண்டார்கள். முதலாவது மனிதன்: „ஒரு நிலத்தைக் கொண்டேன்…“, இரண்டாவது மனிதன்: „ஐந்தேர்மாடு கொண்டேன்…“, மூன்றாவது மனிதன்: „பெண்ணை விவாகம் பண்ணினேன்…“. என்று போக்குச்சொன்னார்கள். இயேசு அந்த உவமையை விருந்தளிப்பவனின் தீர்ப்போடு முடித்தார்: „நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லை“ (லூக்கா 14:24).

மனிதன் மோட்சத்தை சுதந்தரித்துக் கொள்ளவோ அல்லது அதை இழந்து போகவோ வாய்ப்புண்டு என்பதை இதில் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. இதில் கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றால், அழைப்பிதழை ஏற்றுக்கொள்வதா இல்லை அதை நிராகரிப்பதா என்பதே. இதை விட இன்னும் இலகுவாக மோட்சம் செல்ல வழி உண்டோ? நிச்சயமாக இருக்காது! ஒரு வேளை திரள்கூட்டமான ஜனங்கள் மோட்சத்துக்கு நீங்கலாக்கப்பட்டார்களேயானால், அது அவர்கள் மோட்சம் செல்லும் வழியை அறியாதபடியால் அல்ல, மாறாக அவர்கள் அழைப்பை நிராகரித்தபடியாலேயாகும்.

அந்த உவமையில் தோன்றிய மூன்று மனிதர்களில் ஒருவரும் நமக்கு எடுத்துக்காட்டாக இல்லை, ஏனெனில் அவர்களில் ஒருவரும் அழைப்பிதழை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படியானால் விழா நடக்கவில்லையா? ஆயினும் அது நடந்தது. நிராகரிப்பின் பின்பு அந்த எஜமான் எல்லா இடங்களுக்கும் அழைப்பிதழ்களை அனுப்பினான். இப்பொழுது அழைப்பிதழ்கள் பொன் எழுத்தில் அச்சடிக்கப்படவில்லை. இப்போதோ: வாருங்கள்! என்ற குரலொலித்தல் மாத்திரமே. அழைப்பை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக மோட்சத்தில் ஓர் இடம் உண்டு. இப்போது என்ன நடக்கிறது? ஆம், ஜனங்கள் வருகிறார்கள் – அவர்கள் கூட்டம் கூட்டமாகக்கூடி வருகிறார்கள். கொஞ்ச மணிநேரம் கழிந்த பின்பு அந்த எஜமான் இடத்தைப் பார்க்கிறான், இன்னும் இடங்கள் நிரப்பப்படாமல் இருந்தபடியால்: „நீங்கள் மீண்டும் வெளியே சென்று இன்னும் மக்களை அழைத்து வாருங்கள்!“ என்று தன் வேலைக்காரர்களுக்குச் சொன்னான்.

இங்கு நான் இந்த உவமையை எங்களில் பிரதி செய்ய விரும்புகிறேன், ஏனெனில் இது இன்றைக்கு முற்றிலும் எங்கள் சூழ்நிலையைக் குறிக்கிறது. மோட்சத்தில் இன்னும் நிரப்பப்படாத இடங்கள் உண்டு, தேவன் உங்களுக்குச் சொல்லுகிறார்: „வா, உன் இடத்தை நீ வந்து நிரப்பு! புத்திசாலியாக நடந்து, நித்தியத்திற்கு என்று ஒரு இடத்தை ஆயத்தப்படுத்திக்கொள்! இன்றைக்கே அதை செய்!“

மோட்சமானது விபரிக்க முடியாத அளவிற்கு அழகானதாய் இருக்கிறது. ஆகையால் ஆண்டவராகிய இயேசு அதை ஒரு விழாவிற்கு ஒப்பிடுகிறார். 1. கொரிந்தியரில் (அதிகாரம் 2:9) கூறப்படுகிறது: „தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவை மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை“. உண்மையாகவே இந்த உலகத்தில் மோட்சத்துக்கு எதையும் அணுவளவேனும் ஒப்பிட முடியாததாய் இருக்கிறது. அது கற்பனை செய்யமுடியாத அளவிற்கு அழகானதாய் இருக்கிறது. மோட்சத்தை நாம் எந்தவிதத்திலும் தவற விடக்கூடாது, ஏனெனில் அது விலையேறப்பெற்றது. எங்களுக்காக ஒருவர் மோட்சம் செல்லும் கதவைத் திறந்துள்ளார். அவர்தான் இயேசு, கடவுளுடைய குமாரன்! அவருக்குத்தான் நாம் எமது நன்றிக்கடனைச் செலுத்த வேண்டும், அங்கு செல்லும் வழி இவ்வளவு இலகுவானதற்கு அவர்தான் காரணம். இனி அங்கு செல்வது எங்கள் விருப்பில் மாத்திரமே தங்கியிருக்கிறது. குறுகியபார்வையுடைய மனிதர்கள் மாத்திரமே, நாம் பார்த்த அந்த உவமையில் கூறப்பட்ட மூன்று மனிதர்களைப்போல் அழைப்பிதழை, நிராகரிக்கக்கூடும்.

## இரட்சிப்பு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகிறது.

அப்போஸ்தலர் நடபடிகளில் (அதிகாரம் 2:21) நாங்கள் ஒரு முக்கியமான வசனத்தை வாசிக்கிறோம்: „கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்.“ புதிய ஏற்பாட்டில் இது ஒரு மூல வசனமாக அமைந்துள்ளது. பவுல் பிலிப்பி பட்டணத்தில் சிறைச்சாலையில் இருந்தபோது, அங்கிருந்த காவலாளனுக்கு: „கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்“ என்று கூறினார் (அப்போஸ்தலர் 16:31). இந்த செய்தியானது சுருக்கமாக இருந்தாலும், வன்மையானதும் வாழ்வை மாற்றக்கூடியதுமாய் இருக்கிறது. மேலும் அதே இரவிலேயே அந்த காவல்காரன் இயேசுவிடம் மனம் திரும்பினான்.

நாங்கள் அறிந்து கொள்ளவேண்டிய ஒரு முக்கிய காரியம் உண்டு: இயேசு எங்களை அழிவிற்கு போகும் பாதையில் (நரகம்) இருந்து காப்பாற்ற விரும்புகிறார். வேதாகமம் மோட்சத்தையும், நரகத்தையும் குறித்து, அங்கு மனிதர்கள் நித்திய காலமாக இருப்பார்கள் என்று கூறுகிறது. இதில் ஒரு நகரம் அற்புதமானதென்றும், மற்றது கொடுமையானது என்றும் கூறுகிறது. இதற்கிடையில் இன்னொரு நகரம் என்று எதுவும் இல்லை. மரணத்திற்கு ஐந்து நிமிடங்களுக்கு பின்பு எவரும் மரணத்துடன் எல்லாம் முடிந்ததென்று கூற மாட்டார்கள். இயேசுவாகிய நபரிடத்தில் எல்லாம் தீர்மானிக்கப்படுகிறது. எங்களுடைய நித்திய இருப்பிடம் ஒரு நபரிலும் அவருடன் இருக்கும் உறவிலும் தங்கியுள்ளது – அவர் தான் இயேசு.

நான் போலாந்து தேசத்தில் ஒரு விரிவுரைப்பயணத்திற்கு சென்றிருந்தபோது, அங்கு நாம் அவுஷ்சிவிற்ஸ் (Auschwitz, Konzentrationslager) ஊரில் ஜேர்மன் நாசி ஆட்சியில் யூதர்கள் அடைத்து வைக்கப்பட்ட முகாம் ஒன்றைப் பார்க்க சென்றிருந்தோம். அந்த சித்திரவதைக்கூடம் இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது ஜேர்மன் நாசியினரால் தயார் படுத்தப்பட்டது. அவுஷ்சிவிற்ஸில் கொடுமையான காரியங்கள் நடைபெற்றதுடன், நாசியினரால் பின்தொடர்ந்து துன்புறுத்தப்பட்டவர்கள் திட்டமிட்டு கொல்லப்பட்டார்கள். 1942ல் இருந்து 1944வரையும் இங்கு சுமார் 1.6 மில்லியன் மக்களுக்கு மேல், அதில் பிரதானமாக யூத மக்கள் நச்சு வாயு மூலம் கொல்லப்பட்டு அதன் பின்பு சுட்டெரிக்கப்பட்டார்கள். இலக்கியத்தில் அதைகுறித்து பேசும்போது „அவுஷ்சிவிற்ஸின் நரகம்“ என்று கூறப்படுகிறது. நான் ஒரு அலுவலரால் ஒரு வாயு அறையினூடாக நடத்தப்பட்டபோது அந்த சொற்களைக் குறித்து சிந்தித்தேன், அங்கு ஒரே நேரத்தில் 600 மக்கள் கொல்லப்பட்டார்கள். அது நினைத்துப்பார்க்கமுடியாத அளவிற்கு கொடுமையாக இருந்தது. ஆகவே மெய்யாகவே இதுதான் நரகமா?

நாங்கள் பார்வையாளராக அந்த வாயு அறையைப் பார்க்கக் கூடியதாக இருந்தமைக்கு காரணம், அந்த கொடுமை 1945ம்

120-53 Himmel Tamil Auflage 7 2019-08-21.indd 5-8 03.01.2022 15:57:11